IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.SC.No. 25/2024 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 2, PW 2 |
| Name | விஜயராஜ். |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 22nd day of April 2025.

**22.04.2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**சத்தியமாக சாட்சி சொல்கிறேன்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் உதகை, கீழ் தலையாட்டியில் குடியிருந்து, எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். ராஜேஸ்வரி என்பவர் எனது சித்தி ஆவார். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி எனது சித்தி ராஜேஷ்வரியின் மகளாவார். அவர் உதகை எரால்ட் கல்லூரியில் படித்து

வந்தார். கடந்த மே மாதம் ஒரு நாள் தேதி ஞாபகம் இல்லை 2022 ஆம் வருடம் ஏற்கனவே அவர் காதலித்த வந்த நாகராஜ் என்பவருடன் சென்றுவிட்டதாகவும், அவரை காணவில்லை என்றும் சொன்னார்கள். நாங்கள் அவரை தேடி பார்த்தோம். அவர் நாகராஜ் வீட்டில் தான் இருந்தார். அவர் குளிச்சோலையில் உள்ள ஒரு கோவிலில் வைத்து எனது சித்தி மகளை திருமணம் செய்து கொண்டதாக கேள்விப்பட்டேன். எனது சித்தி மகளை நான் பார்த்த போது அவர் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் தாலி கட்டியிருந்ததது. அவரை எனது சித்தி வீட்டிற்கு அழைத்தார். அவர் வர மறுத்துவிட்டார். பின்னர், நாகராஜ் வீட்டில் இருந்தது எனக்கு தெரியும். பின்னர், அவர் கர்ப்பமாக இருப்பதாக தெரியவந்ததது. எனது சித்தி அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள். அவருக்கு உடலில் கர்ப்பகாலத்தில் ஏதோ பிரச்சனை இருந்ததாகவும் சொன்னார்கள். அவர் இளவர் என்பது தெரிந்தும் திருமணம் செய்து கர்ப்பமாக்கியது தொடர்பாக போலிசில் எனது சித்தி நாகராஜ் மீது புகார் கொடுத்தார். இந்த விவரங்கள் எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:-</u>

திருமணம் வயது வந்த பின்னர் தான் பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோரும் 1 ஆம் எதிரியின் பெற்றோரும் சேர்ந்து அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் இல்லை. அதற்கு முன்பாகவே 1 ஆம் எதிரியும், பாதிக்கப்பட்ட சிறுமியும் திருமணம் செய்து கொண்டார்கள். 1 ஆம் எதிரியும் பாதிக்கப்பட்ட சிறுமியும் காதலித்து வந்தது பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோருக்கு பிடிக்கவில்லை என்றும், அதன் காரணமாக தான் இந்த புகாரை கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் இல்லை. பாதிக்கப்பட்ட சிறுமி கல்லூரி படிப்பு படித்து முடித்த பின்னர் திருமணம்

செய்து கொடுப்பதாக 1 ஆம் எதிரியின் பெற்றோரிடம் தெரித்தார்கள். தற்சமயம் 1 ஆம் எதிரியும் பாதிக்கப்பட்ட சிறுமியும் திருமணம் செய்து கொண்டு குழந்தை பெற்று சந்தோசமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட சிறுமி 18 வயது நிரைவடைந்த பின்னர் தான் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் 18 வயது நிரைவடைவதற்கு 1 மாதம் இருந்தது.

**<u>மறுவிசாரணை:—</u>**

இல்லை.

Sd/- Vijayaraj/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.